கோடிக்கணக்கான ரூபாய் நமக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் முன்னுரிமை கொடுத்து—எந்தெந்த பகுதிகளிலே போக்குவரத்து அதிகமாக இருக்கிறதோ அந்த அடிப்படையிலே நாம் முன்னுரிமை கொடுத்து-பாலங்களையும் சாலைகளையும் இன்றைக்குச் சீரமைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துதான் நான் ஏற்கெனவே இதுபோன்று தெரிவித்தேன். ஆகவே, காலப்போக்கில் இது பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக அதிகாரிகளோடு கலந்து பேசி, விரைவிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

10—

பேரணமல்லூர் பேரூராட்சியில் வீடுகள் கட்டுதல்

38097*—திரு. ஆ.கு. சீனிவாசன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரணமல்லூர் பேரூராட்சியில் வீட்டுவசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் வீடுகள் கட்டித்தர திட்டம் எதுவும் அரசிடம் தற்சமயம் இல்லை. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வீடுகள் கட்ட கடன் மட்டுமே வழங்கப்படுகின்றது.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதியிலோ அல்லது பெரணமல்லூர் பேரூராட்சியிலோ இதுவரையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவோ,

1995 நவம்பர் 3]

கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகவோ இன்னும் வீடுகள் கட்டப்படவில்லை. அந்தப் பகுதியில் அரசு அலுவலகங்களும் மற்ற நிறுவனங்களும் அதிகமாக இயங்குகின்றன. அவற்றில் வேலை செய்கிற அரசு அலுவலர்கள் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகராட்சிகளாகிய வந்தவாசி, போளூர், ஆரணி, செஞ்சி போன்ற இடங்களிலிருந்து வருகிறார்கள். ஆகவே, காலையில் வருவதும் மாலையில் போவதுமாக செயல்முறைகள் இருக்கின்றன. அதேசமயத்தில் வளர்ச்சிப் பணிகள் சரிவர நடைபெறுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வீட்டு வசதி பற்றிக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று இரண்டு ஆண்டு காலமாக கோரிக்கைகள் பொது மக்கள் சார்பில் எடுத்துக்கூறியும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரைத்து இருக்கிறார்கள்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, பூமா தேவி எதிரிகளையும் மற்றவர்களையும் தாங்கிக் கொண்டு பொறுமையாக இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் சொன்ன குறளுக்கு எல்லோருக்கும் பொருள் தெரியும்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: தாயுள்ளம் கொண்ட நம்முடைய இதய தெய்வம், அம்மா அவர்களின் நல்லாட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தருவதற்கு—அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை என்றாலும்,—மேலும் பரிசீலனை செய்து வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகள் கட்டித் தருவதற்காக 500 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்வு செய்யப்பட்டதில் பெரணமல்லூர் அதிலே இடம் பெறவில்லை. மேலும் அந்த இடங்களில் உள்ள பொது மக்களின்

தேவையை அறிந்து, அதற்குப்பிறகுதான் டிமாண்ட் ரெஜிஸ்டர் செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரணமல்லூர் பகுதியில் கேட்கக்கூடிய பேரூராட்சிப் பகுதியில் எவ்வளவு பேர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொள்ள விரும்புகிறார்கள் என்ற தேவையினை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு தெரிவிப்பார்களானால், அந்தத் தேவையின் அடிப்படையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தருகிற திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், வந்தவாசி வீட்டு வசதிச் சங்கத்தினுடைய எல்லையிலேதான் பெரணமல்லூர் பேரூராட்சி இருக்கிறது. எனவே, அந்தப் பேரூராட்சி பகுதியில் கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு கடன் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டு காலமாக சுமார் 100 மனுக்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அந்தப் பகுதிக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அங்கீகாரம் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் நிலுவையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டு (மணியடிக்கப்பெற்றது) மேலும் வீடு கட்டித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டித் தரப்படுகின்ற வீடுகளைப் பெற்றுக் கொள்ள 100 நபர்கள் அங்கே முன்வருவார்களேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நிச்சயமாக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

1995 நவம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. வெ. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

இந்தக் கேள்வியில் ஒரு சிறு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. 'வசிப்பதற்கு தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை' என்பதற்குப் பிறகு 'மாற்றி' என்று ஒரு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. அதைச் சேர்த்துக் கொள்ளவும். 'குடியிருப்புகளை மாற்றிப் புதிதாக கட்டித் தரப்படுமா?' என்று இருக்கவேண்டும்.

11—

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுதல்

**80162—திரு. வெ. பாலசுப்பிரமணியன்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வசிப்பதற்குத் தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை மாற்றி புதிதாகக் கட்டித் தரப்படுமா?

(ஆ) பழுதடைந்த குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் விரைவில் பழுது பார்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மிகவும் பழுதடைந்த, மக்கள் வசிப்பதற்கு பாதுகாப்பற்ற குடிசை மாற்று வாரிய வீடுகளை மட்டும், பயனாளிகள் தவணை முறை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன், புதிதாக கட்டித் தரப்படும். அதைப்போலவே, பயனாளிகளிடமிருந்து தவணைமுறை திட்டத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன், குடிசை மாற்று வாரிய வீடுகளை பழுதுபார்க்கும் பணியும் செய்யப்படும்.

திரு. வெ. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மூலமாக குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களை பழுது பார்ப்பது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிவிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்